# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 88/2021**

**Prosecution witness : அ.சா. 13 Date : 27.01.2025.**

| | |
|---|---|
| **Name : அருள்சேவியார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கருமலைக்கூடலில் குடியிருந்து தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அவர் எனது வீட்டருகில் உள்ளார். கடந்த 2017 ம் வருடம் 8 வது மாதத்தில் அ.சா.1 வீட்டின் கேட் உடைக்கப்பட்டு வீட்டில் இ,ருந்த நகைகள் திருட்டு போனதாக நான் கோள்விப்பட்டேன். அவர் பூஜை அறையில் இருந்த வெள்ளி குத்துவிளக்கு, லேப்டாப், கேமரா, ஏடிஎம் கார்டு ஆகியவை திருட்டு போனதாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்மந்தமாக நான் தெரிந்து கொண்டேன் பிறகு சம்பவம் இடம் சென்று அ.சா.1 வீட்டிற்கு சென்று பார்த்தேன் அப்போது அங்கு போலீசார் இருந்தார்கள்.

2) கடந்த 15.08.2017 ம் தேதி காலை 06.00 மணி சுமருக்கு நான் மற்றும் மணி ஆகியோர் இருந்த போது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அப்போது அ.சா.1 வீட்டில் இருந்தவற்றை மற்றும் பக்கத்தில் உள்ள வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தானா என்றால் ஆமாம். 1 வது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.14** ஆகும். பார்வை மகசரில் உள்ள விவரம் எனக்கு தெரியும். போலீசார்

என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். சம்பவம் மற்றவர்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். பொருட்கள் திருட்டு போனது நேரடியாக எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என்ன பொருள் காணாமல் போனது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதியிருந்தது என்பது தெரியாது என்றால் அவ்வாறு இல்லை தெரியும்.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.